20th July 1961]

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் கேட்டதற்காக நான் சொல்கிறேன். அந்தக் கல்வி அதிகாரி அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவரையோ, குற்றஞ்சாட்டி அனுப்பியிருக்கிறவர்களையோ விசாரிக்கவில்லை . . . 9–00 a.m.

MR. SPEAKER : The hon. Member cannot go into details. He can complain, if he wants, that such and such things were not being done. Then Government may make enquiries in whatever way they deem fit. This is not the place where the hon. Member can cross-examine the Hon. Minister on details.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் கூறிய காரணத்தால் அந்தக் கல்வி அதிகாரி சரியான முறையில் விசாரிக்கவில்லை என்று சொல்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட ஒரு விசாரணையை மீண்டும் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த முறையில் சரியாக விசாரணை செய்யவில்லை, எந்த முறையில் அவர்கள் ப்ரஜுடிஸ் ஸாக விசாரணை செய்தார்கள் என்று கனம் அங்கத்தினர் கம்ப்ளெயின்ட் செய்து எழுதி அனுப்பினால் அதை சர்க்கார் பார்த்து அதன் பேரில் முடிவு செய்யும்.

கனம் சபாநாயகர் : அதைத்தான் சொல்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : மதிய உணவுத் திட்டத்தில் இப்படிப் பலவிதமாக உணவு தயார் செய்து விநியோகம் செய்வதால் பலவித ஊழல்கள் ஏற்படுவதால் உணவு தயார் செய்து கொடுப்பதற்குப் பதிலாக ஏழை மாணவர்களுக்குப் பணமாக அவ்வப்போது கொடுத்துவிட்டால் அவர்கள் இஷ்டம் போல் தயார் செய்து கொள்வார்கள். அப்படிச் செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான உத்தேசமில்லை. வேறு பதில் சொல்லலாம். வேண்டாமென்று நினைக்கிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நடத்தப்பட்ட விசாரணை பகிரங்க விசாரணையா ? அல்லது ரகசிய விசாரணையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யார் யாரைப் பார்த்துக் கேட்கவேண்டுமோ, சம்பந்தப்பட்டவர்கள் யார் இருக்கிறார்கள் என்று நினைத்தார்களோ அவர்களை டி.பி.ஐ. அதிகாரிகள் மூலம் விசாரணை செய்தார்கள். இதில் ரகசியமும் இல்லை; பகிரங்க விசாரணை என்று எல்லோரையும் அழைத்து விசாரணை செய்யவும் இல்லை.

சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் (திருவாரூர்)

*558 கேள்வி.—*திரு. ப. ஜெயராஜ் :* கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நன்னிலம் தாலுகாவின் தலைநகராகிய நன்னிலத்திலிருந்து சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை திருவாரூருக்கு மாற்றி இருப்பதை மறுபடியும் நன்னிலத்திற்கு மாற்ற உத்தேசமுண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : நன்னிலம் தாலுகா தலை நகரில் 42 ஆண்டுகளாக இருந்த சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட்டதால் 30, 40 மைல்கள் கட்சிக் காரர்கள் அங்கு செல்ல வேண்டியிருப்பதால் செலவும் கஷ்டமும் ஏற்படுவதால் திரும்ப நன்னிலம் தலைநகருக்கே அந்தக் கோர்ட்டை மாற்ற ஏற்பாடு செய்வார்களா? அதற்கு முன்னதாக காம்ப் கோர்ட்டாவது ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதில் எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கில்லை.

பிளேக்

*559 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1962-63-ல் கிருஷ்ணகிரி-ஒசூர் பகுதிகளில் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) இறந்தவர்கள் எத்தனை பேர்?

(உ) என்னென்ன தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

	1962.	1963.
(அ) கிருஷ்ணகிரி தாலூகா	இல்லை.	6
ஹோசூர் தாலூகா	100	20

	1962,	1963.
(இ) கிருஷ்ணகிரி தாலூகா		2
ஹோசூர் தாலூகா	20	4

(உ) நோய் பரவியுள்ள கிராமங்களுக்கும் அவற்றைச் சுற்றி யுள்ள கிராமங்களுக்கும் சுகாதாரப் பணியாளர் உடனடியாகச் சென்று பார்வையிட்டனர்; அங்குள்ள கிராம மக்களுக்கும் பிளேக் ஊசி போடப்பட்டது. பிளேக் கண்ட கிராமங்களில் எல்லா வீடுகளிலும் B.H.C. சயனோகாஸ் தெளிக்கப்பட்டன. பிளேக் பரவுவதைத் தடுப்பதற்காக, பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் இத்தகைய பாதுகாப்பு முறை மேற் கொள்ளப்பட்டது. நோயாளிகள் அனைவருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS